# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## *33. உணவகங்கள்*

**விளக்கம்:** உணவகங்களில் இருந்து உணவருந்தும் மற்றும் உணவினை கொள்வனவு செய்து எடுத்துச் செல்லும் செல்லும் வசதிகள் உள்ளன. கோவிட் முன்னெச்சரிக்கைகள் இந்த இரண்டு வகைக்கும் பொருந்தும்.

**பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்**
**இயக்குனர் / உரிமையாளர் / வேலை வழங்குனர்**

- சேவைகளை வழங்க ஆரம்பிப்பதற்கு முன்னதாக, முகக்கவசங்கள் தொற்றுநீக்கிகள் போன்ற தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கும் வழங்கல்களை தேவையான அளவு சேமிப்பில் வைத்திருக்கவும்.
- உணவகங்களுக்குப் பொருத்தமான கோவிட் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஊழியர்களுக்கு தனிப்பட்ட பயிற்சிகளை வழங்கவும்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையையும் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் அவர்களுக்கு தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கான செயல்முறையையும் பின்பற்றுங்கள்.
- ஊழியர்கள் தமது சுயபாதுகாப்பை உறுதி செய்து கொள்வதுடன் முகக்கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். கைச் சுகாதாரம் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதுடன் தும்மும் போது மெல்லிழைத் தாளினால் அல்லது முழங்கையினால் மூக்கினையும் வாயினையும் மறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- பணியாளர்கள் நுழைவாயிலில் கை தூய்மிப்பானைப் பயப்படுத்தவும் / கைகளைக் கழுவவும் வசதிகளை ஏற்படுத்துவதுடன், அவர்கள் முகக்கவசம் அணிவதனை வலியுறுத்தவும். உடல் வெப்பநிலைக் கண்காணிப்புப் பொறிமுறையும் கடைப்பிடிக்கப்படலாம்.
- காற்றோட்டத்தினை சீராகப் பேணவும். வளிப்பதனாக்கியின் சாதாரணமான இயக்கத்தினை உறுதிப்படுத்தவும். சுத்தமான காற்றோட்டத்தை அதிகரிக்கவும். வளிமீள்வருகைச் செயன்முறையினை அனைத்து வளியோட்டத் தொகுதிகளிலும் நிறுத்தி வைக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் பொருட்கள்/மேற்பரப்புகளான மேசைகளது மேற்பரப்புகள், கதவுக் கைபிடிகள், உணவுவகைப்பட்டியல் அட்டைகள் (Menu cards), காட்சிப்படுத்தும் முகப்பிடங்கள் (Display counters) மற்றும் மின்உயர்த்திகளது ஆழிகள் போன்றவற்றை சுத்தம் செய்து தொற்றுநீக்குக.
- கதவுகளைத் தொடும் சந்தர்ப்பங்களைக் குறையுங்கள்–வளிப்பதனாக்கிகள் இல்லாத உணவகங்களது கதவுகளைத் திறந்தே வைத்திருங்கள்.
- உணவுவகைப்பட்டியலினை தொலைக்காட்சித் திரையில் அல்லது காட்சிப் பலகையில் அல்லது மேசையின் மேல் போடப்படும் கண்ணாடியின் கீழ் காட்சிப்படுத்தவும்.
- உணவுவகைப்பட்டியல் அட்டைகளைப் பார்வையிட முன்னரும் பின்னரும் வாடிக்கையாளர்கள் தமது கைகளைச் சுத்தப்படுத்துவதற்கான கைதூய்மிப்பான்கள் வழங்கப்பட வேண்டும்.

- வரவேற்பகம்,மின் உயர்த்தியின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் முகப்பிடம் ஆகியவற்றினைச் சுத்தமாகப் பேணுவதுடன் குப்பைகளை உடனுக்குடன் அகற்றவும்.
- உணவகத்தில் புகைபிடிப்பதனை ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம்.
- பாரிய எண்ணிக்கையில் உணவு அருந்துவதற்காக ஒன்று கூடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. உணவு அருந்துபவர்களது எண்ணிக்கையினை மட்டுப்படுத்துவதற்கு முற்பதிவு முறையினைக் கைக்கொள்க. கதிரை மற்றும் மேசைகளது எண்ணிக்கையை குறைக்கவும் அல்லது வாடிக்கையாளர்கள் ஒன்று விட்டு ஒரு மேசையில் அமர்ந்து சாப்பிடுமாறு ஒழுங்கமைக்கவும்: உணவினைத் தனித்தனியான பாத்திரங்களில் வழங்குவதனை ஊக்குவியுங்கள் (அதாவது ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனித்தனிப் பாத்திரங்கள்). உணவங்கள் உணவு பரிமாறுவதற்கான கரண்டி போன்ற உபகரணங்களை வழங்க வேண்டும்.
- மேசையில் பாவிக்கும் (குடிப்பதற்குப் பாவிக்கும்) பாத்திரங்களைச் சுத்தம் செய்வதையும் தொற்றுநீக்கம் செய்வதையும் உறுதிப்படுத்துவதுடன் ஒவ்வொரு தடவை பரிமாறிய பின்னரும் மீளப் பயன்படுத்தக்கூடிய மேசைப் பொருட்;கள் மற்றும் குடிக்கப் பயன்படும் பாத்திரங்களைத் தொற்று

நீக்கம் செய்யவும்.

- சுயமாகப் பரிமாறும் இடங்களில் *(Buffet)*, வாடிக்கையாளர்களுக்கு பரிமாறுவதற்கென ஒரு பணியாளரைக் குறித்தொதுக்க வேண்டும்.
- பொதுமக்கள் உபயோகிக்கும் மலசலகூடங்களுக்குத் தேவையான அளவு கைகழுவுவதற்கான திரவ சவர்க்காரம் (அல்லது சவர்க்காரம்) வழங்கப்பட வேண்டும் அத்துடன் மற்றும் நீர் ஆழிகள் உள்ளிட்ட நீர் வழங்கும் வசதிகள் பழுதின்றிச் செயற்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.
- வளிப்பதனாக்கிகளை (ஏதேனும் இருந்தால்) மிதமான வேகத்தில் இயக்கவும். வாரத்திற்கு ஒரு முறை அதன் வடிகட்டிகளை சுத்தம் / கழுவவும்
- அலுவலக வளாகத்திற்குள் குறுக்கு காற்றோட்டத்தை வலுப்படுத்த கதவுகள், ஜன்னல்கள் மற்றும் விசிறிகளை முடிந்தவரை திறந்து வைக்கவும்.
- நிகழ்நிலை கொள்முதல் கட்டளைகளை வழங்கும் (வீடுகளில் வினியோகிப்பதற்கு/ வந்து பெற்றுக் கொள்வதற்கு) வாடிக்கையாளர்களையும், தாம் வாங்கவுள்ள பொருட்களின் பட்டியலை முன்கூட்டியே அனுப்பி வைக்கும் வாடிக்கையாளர்களையும் ஊக்குவிப்பதற்குச் சிறப்புச் சலுகைகளை அறிமுகப்படுத்தவும்.
- கடமைச் சுற்றொழுங்கின்படி *(Roster)* ஆகக் குறைந்தளவு பணியாளர்கள் ஒரு தடவையில் பணியில் இருக்குமாறு திட்டமிடுங்கள்.
- பொருட்களைப் பெற்றுச் செல்லும் *(pick up)* தனியான வழங்கல் முகப்பிடம் ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் காத்திருப்பு நேரத்தையும் பிற வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளையும் குறைக்க ஏற்பாடு செய்யப்படலாம்.
- பணமில்லா பரிவர்த்தனைகளை முடிந்தவரை ஊக்குவிக்கவும். கடன் / இலத்திரனியல் அட்டைகள் மூலம் பணம் செலுத்திய பின்னர் கையொப்பம் இடுவதற்கான எழுது கோலினை ஒவ்வொரு வாடிக்கையாளரும் பயன்படுத்திய பின்னர் தொற்றுநீக்கம் செய்யவும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பயனாளர் / வாடிக்கையாளர் / எமக்கு**

- கோவிட் நோய்த்தொற்றைத் தடுக்க பொதுவான வழிகாட்டல்களைப் பின்பற்றவும்: மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும், தேவைக்கு ஏற்றவாறு முகக்கவசங்களைப் பயன்படுத்தவும, கிரமமாகக் கை கழுவுவதுடன் சுவாச நற்பழகக்களைப் பின்பற்றவும்.
- பணத்தைக் கையாளுவதைக் குறையுங்கள். முடிந்தவரை சரியான தொகையினை வழங்குவதற்கு முயற்சிக்கவும்.
- பொதுவான மேற்பரப்புகளைத் தொடுவதைக் குறைக்கவும் - உணவு அட்டைகள், கதவு கைப்பிடிகள், காட்சிகள் /கவுண்டர்கள், கையொப்பமிடப் பயன்படுத்தப்படும் பேனாக்கள் என்பவை.
- பொது மேற்பரப்புகளைத் தொடுவதைக் குறைக்கவும்- கதவுக் கைபிடிகள், உணவுவகைப்பட்டியல் அட்டைகள் காட்சிப்படுத்தும் முகப்பிடங்கள் மற்றும் கையொப்பமிடப் பயன்படுத்தும் எழுதுகோல்கள்.

அறிவுறுத்தும் முறைகள்

- இவ் வழிகாட்டல்கள் மத்திய சுகாதார அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்டு வெளியிடப்படுவதுடன் இவை மத்திய மாகாண மற்றும் பிராந்திய சுகாதாரத் திணைக்களங்களினாலும் உள்ளூராட்சிகளாலும் அங்கீகரிக்கப்பட்டுப் பிரதி செய்யப்படுவதன் மூலம மேலும் வலுப்படுத்தப்படலாம்.
- உணவகங்களில் பல்வேறு பகுதிகளில் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- இதை சமூக ஊடகங்கள் மற்றும் பொதுசன தொடர்பு ஊடகங்கள் வழியாக பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
- உள்ளூர் உணவகங்களிலிருந்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாகவும், அவர்களின் சந்தைப்படுத்தல் வலைப்பின்னல்கள் ஊடாக சமூக ஊடகங்கள் மூலமும் பரப்பப்படலாம் .
- உள்ளூர் உணவகங்களிலிருந்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மின்னஞ்சல் / குறுகிய செய்திகள் சேவை / சமூக ஊடகங்கள் வழியாக அவர்களின் சந்தைப்படுத்தல் வலைப்பின்னல்கள் மூலம் அனுப்பப்படும் மின்னஞ்சல்கள்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020